# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

**வழக்கு எண்.14155/விசாரணை/2009**

<u>விசாரணை நடைபெற்ற நாள் 23.09.2009.</u>

முன்னிலை: முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,
எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர்: திரு M.ஆரோக்கியசாமி,
F/o. A.அமிர்தம்,
3/530, திருமலை நகர்,
மண்ணரை,
திருப்பூர் – 7.

பொது அதிகார அமைப்பு: பொதுத் தகவல் அலுவலர்,
உதவிப் பொறியாளர் (O&M) அலுவலகம்,
தமிழ்நாடு மின்சா வாரியம்,
ராஜாஜி நகர், 3–வது பிரதான சாலை,
பாபா நகர், வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.

பொதுத் தகவல் அலுவலர்,
சென்னை மாநகராட்சி (மண்டலம் – 4),
5, ஆன்டர்சன் சாலை, அயன்புரம்,
சென்னை – 600 023.

*****

மனுதாரர் திரு M.ஆரோக்கியசாமி மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு K.மோகன், உதவி வருவாய் அலுவலர், மண்டலம் – 4, சென்னை மாநகராட்சி, அயன்புரம், சென்னை இன்று (23.09.2009) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர். பொதுத் தகவல் அலுவலர், உதவிப் பொறியாளர் (O&M), தமிழ்நாடு மின்சார வாரியம், வில்லிவாக்கம், சென்னை இன்றைய விசாரணைக்கு வரவில்லை.

மனுதாரர் 30.04.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், சென்னை மாநகராட்சி, அயன்புரம் அவர்களிடம் விடுபட்ட தகவல் வேண்டி மனுச் செய்துள்ளார். 03.06.2009 அன்று துறைக்கு மேல் முறையீடும் 22.06.2009 அன்று ஆணையத்திற்கு மேல் முறையீடும் செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (23.09.2009) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் 28.03.2009 அன்று சென்னை மாநகராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலரிடம் சில தகவல்களைக் கேட்டதாகவும், அதில் இரண்டு தகவல்கள் விடுபட்டதால் மீண்டும் ஆணையத்திற்கு மனுச் செய்ததாகவும் கூறினார். இன்றைய விசாரணையில் மனுதாரர் கோரிய விடுபட்ட தகவல்கள் வழங்கப்பட்டன.

இதே வழக்கில் மனுதாரர் உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களிடமிருந்தும் சில தகவல்களைக் கேட்டிருக்கின்றார். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அனுப்பப்பட்ட பதிவஞ்சலைப் பெற்றுக் கொள்ளாமல் மனு திருப்பியனுப்பியதைத் தக்க ஆதாரங்களுடன் ஆணையத்திற்கு மனுதாரர் அளித்தார். 14.07.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர் தமிழ்நாடு மின்சார வாரியம் மனுதாரருக்கு உரிய தகவலை அளித்துள்ளார். திருமதி P.ரமணி பாய் என்பவருக்கு உரிய ஆவணங்கள் கொடுக்கப்பட்டதால் மின் இணைப்பு வழங்கப்பட்டதாக உரிய தகவல் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இரண்டிலும் தகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றை வைத்துக் கொண்டு உரிய இடத்தில் முறையிட்டுப் பரிகாரம் தேடிக் கொள்ளும்படி மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்துகின்றது.

விசாரணை முடிவில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. இன்றைய விசாரணைக்கு வரச்சொல்லி சம்மன் அனுப்பியும் விசாரணைக்கு வராத பொதுத் தகவல் அலுவலரிடம் உரிய விளக்கத்தைப் பெற்று இவ்வாணை பெற்ற ஒரு மாதத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பும்படி **தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை** கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வருகின்ற மனுவைத் திருப்பி அனுப்பியதற்காகச் சம்பந்தப்பட்ட அலுவலர் மீது 20(1)—ன் கீழ் ஏன் அதிகபட்ச அபராதம் விதிக்கலாகாது என்பதற்குரிய விளக்கத்தைப் பெற்று ஒரு மாதத்திற்குள் ஆணையத்திற்குத் தெரிவிக்குபடி **தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை** கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 25.09.2009** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.14155/விசாரணை/2009</u>**

தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
சென்னை – 600 002.

பொதுத் தகவல் அலுவலர்,
உதவிப் பொறியாளர் (O&M) அலுவலகம்,
தமிழ்நாடு மின்சாா வாரியம்,
ராஜாஜி நகர், 3—வது பிரதான சாலை,
பாபா நகர், வில்லிவாக்கம்,
சென்னை – 600 049.

பொதுத் தகவல் அலுவலர்,
சென்னை மாநகராட்சி (மண்டலம் – 4),
5, ஆன்டர்சன் சாலை, அயன்புரம்,
சென்னை – 600 023.

திரு M.ஆரோக்கியசாமி,
F/o. A.அமிர்தம்,
3/530, திருமலை நகர்,
மண்ணரை,
திருப்பூர் – 7.

*"ptl"*